# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (24.04.2024 முதல் 28.04.2024)

**அறிக்கை எண் 033/2024** **தேதி.23.04.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 42°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 13°செ முதல் 15°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை

ஈரோடு மாவட்டத்தின் 18.04.24 முதல் 22.04.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36°செ முதல் 37°C முதல் 39°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 26°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 74 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 25 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 08-13 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (18.04.2024 முதல் 22.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 28.04.2024-08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/04 | 19/04 | 20/04 | 21/04 | 22/04 | தேதி | நாள் - 1 24/04 | நாள் - 2 25/04 | நாள் - 3 26/04 | நாள் - 4 27/04 | நாள் - 5 28/04 |
| 0.0 | 0.3 | 0.4 | 1.4 | 1.3 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 39 | 38 | 39 | 37 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 43 | 42 | 43 | 42 | 41 |
| 26 | 26 | 26 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 27 | 28 | 27 | 27 | 28 |
| 5 | 5 | 6 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 1 | 2 | 3 | 3 |
| 74 | 70 | 70 | 74 | 67 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 50 | 60 | 60 | 60 |
| 40 | 39 | 51 | 25 | 36 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 20 | 20 | 20 | 20 | 20 |
| 10 | 12 | 13 | 8 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 10 | 8 | 8 | 8 |
| 200 | 200 | 230 | 90 | 200 | காற்று வீசும் திசை | 140 | 110 | 110 | 140 | 160 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (24.04.2024 முதல் 28.04.2024)

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 41°செ முதல் 43°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **24-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **25-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **26-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **27-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **28-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 8 - 12 கி.மீ வேகமான காற்றுடன் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. மதியநேரங்களில் (12.00 – 3.00 மணிவரை) அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தில் வேலைபார்பதோ அல்லது வெளியில் செல்வதையோ விவசாயிகள் தவிர்க்கவேண்டும். மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும். |
| கம்பு (அ) சோளம் | **விதைப்பு** | இறவையில் கம்பு (அ) சோளம் விதைக்க மிகச்சரியான தருணம். எனவே, மக்காசோளம் விதைக்க தீர்மானித்திருந்தால் தவிர்த்து கம்பு(அ) சோளம் விதைக்கலாம். |
| எள் | பால் பிடிக்கும் பருவம் | தற்போது நிலவும் அதிக பகல்நேர மற்றும் இரவு நேர வெப்பநிலை காரணமாக பிப்ரவரி மாதம் கோடையில் இறவை எள் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சியின் தாக்கம் தென்படுகிறது. இதனை கண்காணித்து மாலை நேரங்களில் 5 சதம் மேலதையான் பூச்சி மருந்தை தூவி விடவும். |
| கரும்பு | வளர்பருவம் | சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பின் நுனிக்குருத்துப்புழு வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் அடிக்கடி நீர் பாய்ச்சி வயலை ஈரமாக வைத்துக்கொள்வதுடன் பயிர் மூடாக்கும் செய்யலாம். |

| | | |
|---|---|---|
| மரவள்ளி | வளர்பருவம் | சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் மரவள்ளிகிழங்கில் சுருள் வெள்ளை ஈ வர வாய்ப்புள்ளது. இதற்கு விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி ஏக்கருக்கு **5 – 6** இடங்களில் வைக்கவும். தேவைப்பட்டால் புரோனோபாஸ் 2 மில்லி அல்லது அசிபேட் 2 கிராம் ஒருலிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| கால்நடைகள் | | உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் குறைந்து வரும் காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழுற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும். கால்நடைக்குடில்களைச் சுற்றிலும் ஈரமான சாக்குகளை தொங்கவிடவும். மதியநேரங்களில் (12.00 – 3.00 மணிவரை) அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தினைத் தவிர்த்து கால்நடைகளை **4.00** மணிக்கு மேல் மேய்ச்சலுக்கு விடவும். |

**குறுஞ்செய்தி**

- மதியநேரங்களில் (12.00 – 3.00 மணிவரை) அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தில் வேலைபார்ப்பதோ அல்லது வெளியில் செல்வதையோ விவசாயிகள் தவிர்க்கவேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**